**OS.NO:74/2022**

**PW 1 :** திருமதி.பவானி

நாள் : 06.03.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் விவசாயம் செய்கிறேன். பிரதிவாதியின் மச்சான் சந்திரகேசவன் எங்கள் ஊரைச்சார்ந்தவர். சந்திரகேசவன் மூலம் எனக்கு பிரதிவாதி பழக்கம் ஆனார். தாவா வீட்டை விற்க போவதாக சந்திரகேசவன் மற்றும் நந்தினியின் கணவர் என்னிடம் வந்து சொன்னார்கள். அந்தசொத்து நந்தினி பெயரில் ஆற்காட்டில் உள்ளது. தாவா சொத்து, ஆற்காடு நகரத்தில், தோப்புக்கனாவில் உள்ளது. தாவா சொத்து ரூ.17 இலட்சத்திற்கு கிரையம் பேசப்பட்டது. சந்திரகேசவனும், பிரதிவாதியின் கணவரும் தாவா சொத்தை அடைமானம் வைத்து கடனாக தான் ரூ.17 இலட்சம் என்னிடம் கேட்டார்கள் என்றால், அது தவறு. பிரதிவாதிக்கு நான் ரூ.16 இலட்சம் தொகை 13.08.2021ல் கொடுத்தேன். அந்த தொகைக்கு நான் பிரதிவாதியிடம் இருந்து வட்டி வாங்கினேனா என்றால், நான் வட்டி எதுவும் வாங்கவில்லை. பிரதிவாதி என்னிடம் ரூ.4 இலட்சம்தான் ரூ.100க்கு 5 சதவீத வட்டி வீதம் கடனாக வாங்கினார் என்றாலும், என்னிடம் பிரதிவாதி ரூ.16 இலட்சம் வாங்கவில்லை என்றாலும், அது சரியல்ல. பிரதிவாதி ரூ.4 இலட்சத்திற்கு மாதந்தோறும் ரூ.20 ஆயிரம் வீதம் 2022ம் ஆண்டு மே மாதம் வரை கொடுத்தார் என்றால், அது தவறு. பிரதிவாதிக்கு எழுத, படிக்க தெரியாது என்றாலும்,அவர் 5ம் வகுப்புவரை தான் படித்துள்ளார் என்றாலும், எனக்கு அது பற்றி தெரியாது. பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பதாக எந்த எண்ணமும் இல்லை என்றால், அது தவறு. தாவா சொத்தின் மதிப்பு ரூ.42

இலட்சம் போகும் என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தை ரூ.17 இலட்சத்திற்கு பிரதிவாதி, எனக்கு விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், நான் பொய்யாக இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றாலும், அது சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் சந்திரகேசவனும் மற்றும் ஒரு நபரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். சாட்சி கையெழுத்து போட்டுள்ள நபர்கள் எனக்கு உறவினர்கள் என்றால், அது தவறு. அவர்கள் பிரதிவாதிக்கு தான் உறவினர்கள். பிரதிவாதி அடமான கடனாக தான் என்னிடம் ரூ.4 இலட்சம் பெற்றார் என்றாலும், பிரதிவாதிக்கு எழுத, படிக்க தெரியாததால் அவரை ஏமாற்றி கிரைய ஒப்பந்தம் தயாரித்து கையெழுத்து வாங்கினோம் என்றாலும், அது சரியல்ல. சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் வா.சா.ஆ.1 யை உருவாக்கினோம் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யானது என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், அது சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

Sd/. M.Selvam,

I Additional District Judge,
Ranipet.